Nestlé
Good Food, Good Life



**2014 மற்றும் 2015 ஆம் ஆண்டில் 'ஏற்றுமதியில் மிகச் சிறந்த பல்தேசிய நிறுவனம்' என்ற விருதுகளை நெஸ்லே தனதாக்கியுள்ளது**

இந்த மாதம் இடம்பெற்ற மதிப்புமிக்க ஜனாதிபதி ஏற்றுமதி விருதுகள் நிகழ்வில் 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளுக்கான 'ஏற்றுமதியில் மிகச் சிறந்த பல்தேசிய நிறுவனம்' என்ற இரு விசேட விருதுகளை தனதாக்கியுள்ள நெஸ்லே நிறுவனம், தனது வெற்றிப்பயணத்தை தொடர்ந்தும் சிறப்பாக முன்னெடுத்துச் செல்கின்றது.

இலங்கையின் ஏற்றுமதித் துறைக்கு நிறுவனம் ஆற்றியுள்ள பங்களிப்புகளுக்கான இனங்காணல் அங்கீகாரமாக, இந்த பெருமதிப்பு மிகு விருதை அதிமேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிரிசேன அவர்கள் வழங்கிவைத்தார்.

நெஸ்லே லங்கா நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரான ஷிவானி ஹெக்டே அவர்கள் கூறுகையில், *''இலங்கை தேங்காய்ப் பால் மா ஏற்றுமதியில் எமது வெற்றிகரமான தொழிற்பாடுகளுக்கான இனங்காணல் அங்கீகாரமான இவ்விருதை கௌரவத்துடன் ஏற்றுக்கொள்கின்றோம். அசல் இலங்கை உற்பத்தியொன்றை உலகளாவில் சந்தைப்படுத்தி, சர்வதேசரீதியாக பெரும்பாலானவர்களால் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற வகையில் அவர்களின் விருப்பத்திற்கு உரிய ஒரு உற்பத்தியாக மாற்ற முடிந்துள்ள வகையில், இன்று இலங்கையில் உள்ள ஒரு சில பல்தேசிய நிறுவனங்களுள் ஒன்றாக நாம் திகழ்வதையிட்டு மிகவும் பெருமை கொள்கின்றோம். உள்நாட்டில் எமது வழங்குனர்கள் தமது தர நடைமுறைகளை மேம்படுத்த உதவி, பண்ணையாளர்கள் தமக்கு பயனளிக்கும் வகையில் பயிர்களை வளர்ப்பதற்கு வலுவூட்டி, எமது பெறுமதிச் சங்கிலியில் உள்ள அனைத்து மக்களினதும் வாழ்வை நாம் மேம்படுத்தியுள்ளோம்.''*

தேங்காய் உற்பத்திப் பிரிவில் இலங்கையிலுள்ள மிகப் பாரிய, பெறுமதி சேர்ப்பிக்கப்பட்ட உற்பத்திகளுள் ஒன்றாக நெஸ்லே நிறுவனத்தின் தேய்காய்ப் பால் மா திகழ்வதுடன், உலகளாவில் பாரியளவில் ஏற்றுமதி செய்யப்படும் உற்பத்திகளுள் ஒன்றாகவும் திகழ்ந்து வருகின்றது. இலங்கையின் ஏற்றுமதித் தொழிற்துறைக்கு நிறுவனம் ஆற்றி வருகின்ற பங்களிப்பு, இலங்கையிலுள்ள தேங்காய் வழங்குனர்களுடன் அறிவு மற்றும் தொழில்நுட்ப நிபுணத்துவத்தைப் பகிர்ந்துகொள்ளல் மற்றும் தேங்காய் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள 5,000 இற்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு நிலையான வாழ்வாதாரத்தை வழங்குதல் ஆகியவற்றிற்காக நிறுவனத்திற்கு ஏற்றுமதி அபிவிருத்திச் சபை மற்றும் ஏற்றுமதிகளுக்கான தேசிய சம்மேளனத்திடமிருந்து பல்வேறு விருதுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

புத்தம்புதிய, உயர் தரத்திலான தேங்காய்களை உபயோகித்து, குருணாகலில் உள்ள நிறுவனத்தின் தொழிற்சாலையில் மட்டுமே உற்பத்தி செய்யப்படுகின்ற நெஸ்லே நிறுவனத்தின் *Maggi* தேங்காய்ப் பால் மா, உலகிலுள்ள 60 இற்கும் மேற்பட்ட நாடுகளுக்கு நேரடியாக ஏற்றுமதி செய்யப்படுவதுடன், உலகளாவில் நெஸ்லே மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது.

தேங்காய்ப் பால் மாவை உற்பத்தி செய்வதற்காக, புத்தம்புதிய தேங்காய்களை கொள்வனவு செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவு மூலமாக 2015 ஆம் ஆண்டில் ரூபா 2.6 பில்லியன் தொகையை நெஸ்லே நிறுவனம் உள்நாட்டு தேங்காய்த் தொழிற்துறைக்கு பங்களிப்புச் செய்துள்ளது.

*''இலங்கையில் ஏற்றுமதியாளர்களுக்கு வழங்கப்படுகின்ற அதியுச்ச இனங்காணல் அங்கீகாரமாக ஜனாதிபதி ஏற்றுமதி விருதுகள் அமைந்துள்ளன. உலகளாவில் நெஸ்லே நிறுவனங்கள் மத்தியில் தேங்காய்ப் பால் மாவை உற்பத்தி செய்யும் ஒரேயொரு உற்பத்தியாளர் என்ற வகையில், ஒவ்வொரு வருடமும் எமது தொடர்ச்சியான பெறுபேற்றுத்திறன் மற்றும் பங்களிப்புகளுக்காக இனங்காணல் அங்கீகாரத்தை சம்பாதித்து வருவதையிட்டு நாம் மிகவும் பெருமை அடைந்துள்ளோம்,''* என்று நெஸ்லே லங்கா நிறுவனத்தின் ஏற்றுமதிகளுக்கான முகாமையாளரான லக்ஷிகா வீரமுந்தகே அவர்கள் குறிப்பிட்டார்.

முக்கியமான விருதுகள் நிகழ்வு ஒன்றில் உள்நாட்டு ஏற்றுமதிகள் துறைக்கு கணிசமான பங்களிப்பை வழங்கியுள்ள நிறுவனங்களுக்கு, ஜனாதிபதியின் இனங்காணல் அங்கீகாரமும், விருதுகளும் வழங்கப்படுகின்ற வகையில் ஒவ்வொரு வருடமும் ஏற்பாடு செய்யப்படுகின்ற ஜனாதிபதி ஏற்றுமதி விருதுகள் நிகழ்வு, அனைவராலும் ஆவலுடன் எதிர்பார்க்கப்படுகின்ற ஒரு நிகழ்வாக மாறியுள்ளது. 2010 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் 'தேங்காய் மற்றும் தேங்காயை மூலப்பொருளாகக் கொண்ட உற்பத்தித் துறையில் மிகச் சிறந்த ஏற்றுமதியாளர்' மற்றும் 2011 ஆம் ஆண்டில் 'உணவு மற்றும் ஏனைய பான வகை உற்பத்தித் துறையில் மிகச் சிறந்த ஏற்றுமதியாளர்' ஆகிய விருதுகளையும் நிறுவனம் கடந்த காலங்களில் வென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.